**ஜனவரி – 11**

# TNPSC துளிகள்

- விபத்துகளைத் தடுப்பதற்காக வேண்டி, ராணிப்பேட்டை, வேலூர் மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களை உள்ளடக்கிய சென்னை - பெங்களூரு நெடுஞ்சாலையில் (NH 44) விபத்துகள் அதிகம் நடைபெறும் இடங்களாக அடையாளம் காணப்பட்ட சுமார் 13 இடங்களில் எஃகினால் ஆன தடுப்புகளை நிறுவும் பணியை இந்தியத் தேசிய நெடுஞ் சாலை ஆணையம் (NHAI) தொடங்கியுள்ளது.
- டிட்டகர்ஹ் இரயில் சிஸ்டம்ஸ் நிறுவனமானது, இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட அதன் முதல் ஓட்டுநர் இல்லாத இரயில்களை பெங்களூரு மெட்ரோ இரயில் கழகத்தின் (BMRCL) மஞ்சள் வழித்தடத்தில் இயக்குவதற்காக ஒப்படைத்துள்ளன.
- கடலோரக் காவல் படைக்காக உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு கட்டமைக்கப் பட்ட 'அமுல்யா' மற்றும் 'அக்சய்' எனப்படும் இரண்டு விரைவு ரோந்துக் கப்பல்களின் (FPV) செயல்பாடுகள் சமீபத்தில் தொடங்கப்பட்டன.
- 2025 ஆம் ஆண்டு இந்தியக் குடியரசு தின விழாவில் இந்தோனேசிய அதிபர் பிரபோவோ சுபியாண்டோ தலைமை விருந்தினராக கலந்து கொள்ள உள்ளார்.
- புது தில்லியில் இராஷ்ட்ரிய ஸ்மிருதி வளாகத்தில் முன்னாள் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி அவர்களுக்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு நினைவுச் சின்னத்தினை நிறுவுவதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- ஜம்மு காஷ்மீரின் ரியாசி மாவட்டத்தில் அமைந்துள்ள இந்தியாவின் முதல் கம்பி வடந் தாங்கி இரயில் பாலமான அஞ்சி காட் பாலத்தில், இந்திய இரயில்வே நிர்வாகமானது பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு (டவர் வேகன்) வாகனத்தின் சோதனை ஓட்டத்தினை வெற்றிகரமாக நடத்தியது.
- இந்தியா மற்றும் மலேசியா ஆகிய நாடுகள் தங்கள் முதன்முதலான பாதுகாப்புப் பேச்சுவார்த்தையினை புது டெல்லியில் மேற்கொண்ட நிலையில் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் மற்றும் மலேசியாவின் ராஜ நுஷிர்வான் ஆகியோர் இந்தப் பேச்சுவார்த்தைக்குத் தலைமை தாங்கினர்.

# தமிழ்நாடு செய்திகள்

## மூன்றாவது UmagineTN2025 மாநாடு




- தமிழ்நாட்டின் முதன்மையான தகவல் தொழில்நுட்ப மாநாடு ஆனது, 'செயற்கை

நுண்ணறிவு மற்றும் மாறுதல் மிக்கத் தொழில்நுட்பம் மூலம் சமமான வளர்ச்சியை தூண்டுதல்' என்ற கருத்துருவின் கீழ் நடைபெற்றது.

- இந்த இரண்டு நாட்கள் அளவிலான மாநாடு ஆனது, தொழில்நுட்பமும் புதுமையும் எவ்வாறு பிரகாசமான, சமமான எதிர்காலத்தினை வடிவமைக்க முடியும் என்பதை வெளிப்படுத்துவதற்காகவும் ஆராய்வதற்காகவும் வேண்டி உலகின் மிக முன்னணிச் சிந்தனையாளர்களை ஒன்று திரட்டியது.
- UmagineTN என்பது தமிழ்நாடு மாநிலத்தினை, டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாறுவதற்கான அதன் இலக்கினை நோக்கி நகர்த்தும் ஒரு பரிணமித்து வரும் தளமாக உள்ளது.

# தேசியச் செய்திகள்

## 2023 ஆம் ஆண்டு BNSS சட்டத்தின் 479 வது பிரிவு

**SECTION 479 BNSS TO UNDERTRIALS CASES REGISTERED BEFORE JULY 1, 2024 ALLOWED BY SC**

| | |
|---|---|
| HEADLINE | SC ORDERS RETROSPECTIVE APPLICATION OF SECTION 479 BNSS, GRANTS BAIL TO UNDERTRIALS BEFORE JULY 1. |
| SUMMARY | SC Applies Section 479 BNSS Retrospectively, Allows Bail for Undertrials Serving Considerable Sentence Time. |
| KEY FACTS | Re-Inhuman Conditions In 1382 Prisons: SC Bench Consists of Justices Hima Kohli and Sandeep Mehta. |
| LEGAL INSIGHTS | SC: Section 479 BNSS Applies Retrospectively, Eases Bail Conditions for First-Time Offenders and Undertrials. |
| IMPACT | SC Ruling to Release Undertrials, Addresses Prison Overcrowding, Upholds Personal Liberty and Fair Treatment. |
| WHY IT MATTERS | Judiciary Commits to Personal Liberty, Fair Treatment, and Legal Reforms for Undertrials and Prisoners. |

- மத்திய அரசானது, 2023 ஆம் ஆண்டு பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா சட்டத்தின் 479வது பிரிவின் விதிகளை அமல்படுத்த செய்யுமாறு அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களுக்கு (UT) அறிக்கை அனுப்பியுள்ளது.
- ஒரு குற்றத்தினைப் பற்றிய புலன் விசாரணை அல்லது விசாரணையின் போது, அந்தக் குற்றத்திற்காக வழங்கப்படும் அதிகபட்ச சிறைத் தண்டனைக் காலத்தில் பாதி காலம் வரை காவலில் வைக்கப்பட்டிருந்தால், அவர் நீதிமன்றத்தினால் பிணை ஆணையில் விடுவிக்கப்படலாம் என்று BNSS சட்டத்தின் 479 (1)வது பிரிவு கூறுகிறது.
- ஆனால் அந்தச் சட்டத்தின் கீழ், அது மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை போன்ற தண்டனைகளில் ஒன்று வழங்கப்படும் குற்றமாக இருக்கக் கூடாது.
- மேலும், BNSS சட்டத்தின் 479 (3)வது பிரிவானது, இத்தகைய விசாரணைக் கைதிகளை

ஜாமீன் அல்லது பிணையில் விடுவிப்பதற்காக வேண்டி சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்வதற்கு வேண்டிய மிக முக்கியப் பொறுப்பினைச் சிறைச்சாலைக் கண்காணிப்பாளருக்கு வழங்குகிறது.

## மத்தியத் தகவல் ஆணைய உத்தரவு 2025




- 2005 ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் அரசு ஆணையங்களாக உள்ள அனைத்து உயர் நீதிமன்றங்களும், மத்தியத் தகவல் ஆணையத்தின் அதிகார வரம்பிற்குள் தான் வரும் மாநிலத் தகவல் ஆணையத்தின் வரம்பின் கீழ் அல்ல என்று மத்தியத் தகவல் ஆணையம் தீர்ப்பளித்துள்ளது.
- மத்திய மற்றும் மாநில தகவல் ஆணையங்கள் என்பவை அந்தந்த அரசாங்கங்களால் அமைக்கப் பட்டது என்பதால், அவற்றின் அதிகார வரம்பு தனித்தனியாகவும் மிகவும் ஒரு தனித்துவமாகவும் இருக்கும்.
- உயர் நீதிமன்றங்களின் கட்டமைப்பு மற்றும் அதன் அமைப்பு ஆனது, இந்திய அரசியல் அமைப்பின் VIIவது அட்டவணையின் ஒன்றியப் பட்டியலின் 78வது சேர்க்கையின் கீழ் பாராளுமன்றத்தின் சட்டமியற்றலுக்குள் உள்ளன.

## பஞ்சாயத்துகளிலிருந்துப் பாராளுமன்றத்திற்கு முன்னெடுப்பு 2.0




- மக்களவை சபாநாயகர் "Panchayat Se Parliament 2.0" என்ற ஒரு முன்னெடுப்பினைத்

தொடங்கி வைத்துள்ளார்.

- நாடு முழுவதும் உள்ள பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்ட பெண் அரசியல் பிரதிநிதிகளுக்கு அரசியலமைப்பு மற்றும் பல்வேறு பாராளுமன்ற நடைமுறைகள் பற்றிய நுண்ணறிவை இது வழங்குகிறது.
- இந்தத் திட்டம் ஆனது 22 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களைச் சேர்ந்த பட்டியலிடப்பட்டப் பழங்குடியினர் பிரிவில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 502 பெண் பிரதிநிதிகளை ஒன்றிணைத்தது.
- பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் சமூகப் பிரிவில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் பிரதிநிதிகளுக்கு முக்கிய அதிகாரம் அளித்து, அரசியலமைப்பு விதிகள், பாராளுமன்ற நடைமுறைகள் மற்றும் நிர்வாகம் குறித்த அவர்களின் அறிவை மேம்படுத்தி, பயனுள்ள தலைமையை உருவாக்க உதவுகிறது.

## சுற்றுச்சூழல் நிவாரண நிதி (திருத்தம்) திட்டம், 2024





- இந்திய அரசாங்கம் ஆனது, 2024 அம் ஆண்டு சுற்றுச்சூழல் நிவாரண நிதி (திருத்தம்) திட்டத்தின் மூலம் 2008 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் நிவாரண நிதித் திட்டத்தில் பல்வேறு திருத்தங்களை மேற்கொண்டுள்ளது.
- நிதி நிர்வாகத்தினை மேம்படுத்துதல், திறம் மிக்க விநியோகத்தினை உறுதி செய்தல் மற்றும் சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு முயற்சிகளை மேம்படுத்துதல் ஆகியவற்றை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் (CPCB) ஆனது இந்தத் திட்டத்திற்கான ஒரு நிதி மேலாண்மை அமைப்பாக ஐந்து ஆண்டுகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளது.
- இது 2010 ஆம் ஆண்டு தேசியப் பசுமை தீர்ப்பாயச் சட்டத்தின் 24வது பிரிவின் கீழ் வரும் இழப்பீடுகளிலிருந்தும் மற்றும் மூன்றாம் தரப்புக் காப்பீட்டுச் சட்டத்தின் 14, 15 அல்லது 17 ஆகிய பிரிவின் கீழ் வரும் அபராதங்களிலிருந்தும் நிதியைப் பெறும்.

## இந்தியாவின் வறுமை குறித்த SBI அறிக்கை

- 2023–24 ஆம் ஆண்டிற்கான மாதாந்திரத் தனிநபர் நுகர்வுச் செலவினம் (MPCE) ஆனது கிராமப்புறங்களில் 4,122 ரூபாயாகவும், நகர்ப்புறங்களில் 6,996 ரூபாயாகவும் உள்ளது.

- அதாவது, தினசரி செலவினங்கள் முறையே 137 ரூபாய் மற்றும் 233 ரூபாயாக உள்ளது.
- பாரத் ஸ்டேட் வங்கியின் ஆராய்ச்சியானது, 2011-12 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட வறுமைக் கோட்டினை புதுப்பித்து கிராமப்புறங்களில் மாதத்திற்கு சுமார் 1,632 ரூபாய் ஆகவும், நகர்ப்புறங்களில் 1,944 ரூபாய் ஆகவும் 2023-24 ஆம் ஆண்டிற்கான, வறுமைக் கோட்டினை நிர்ணயித்துள்ளது.
- இந்த வரம்புகளுக்குக் கீழே வருமான அளவுகளைக் கொண்ட நபர்கள் மிக ஏழ்மையில் உள்ளவர்களாக வகைப்படுத்தப் படுகிறார்கள்.
- இதனுடன் ஒப்பிடச் செய்கையில், 2011-12 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட வறுமைக் கோடுகள் முறையே 816 ரூபாய் மற்றும் 1,000 ரூபாயாக இருந்தன.
- இந்தப் புதிய வரம்பின் அடிப்படையில், கிராமப்புறங்களில் 27.4 சதவீதமும் நகர்ப்புற மக்களில் 23.7 சதவீதமும் ஏழ்மை நிலையில் உள்ளனர்.
- ஒட்டு மொத்தமாக, நாட்டில், 26.4 சதவீத மக்கள் ஏழ்மை நிலையில் உள்ளனர்.




## எஃகுத் துறைக்கான புதிய உற்பத்தி ஊக்குவிப்புத் திட்டம்




- மத்திய அரசானது, சுமார் 4,400 கோடி ரூபாய் மதிப்பிலான ஒரு மொத்த ஒதுக்கீட்டுடன், எஃகுத் துறைக்கான புதிய உற்பத்தி ஊக்குவிப்புத் (PLI) திட்டத்தின் அடுத்தச் சுற்றினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்த முன்னெடுப்பானது, மிக குறிப்பாக பிரத்தியேக எஃகு உற்பத்தியில் அதிக எஃகு நிறுவனங்கள் மற்றும் முதலீடுகளை ஈர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- எஃகுத் தொழில் துறைக்கான முதல் PLI திட்டம் சுமார் 6,322 கோடி ரூபாய் என்ற அதிக


ஒதுக்கீட்டுடன் அறிமுகப்படுத்தப்பட்டது.

- அது 27,106 கோடி ரூபாய் என்ற உறுதியளிக்கப்பட்ட முதலீட்டில், 18,300 கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகளை மட்டுமே பெற்றது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## மிக நீளமான நட்சத்திர மற்றும் வாயு நீட்சி

- NGC 3785 அண்டத்துடன் தொடர்புடைய, இதுவரையில் கண்டறியப்படாத மிக நீளமான நட்சத்திர மற்றும் வாயு நீட்சியின் முடிவில் ஒரு புதிய அதிக பரவல் எல்லை கொண்ட அண்டம் உருவாகுவதை வானியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இது பூமியிலிருந்து சுமார் 430 மில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவில் லியோ என்ற விண்மீன் திரளில் அமைந்துள்ளது.
- இது NGC 3785 அண்டத்திலிருந்து 1.27 மில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவிற்கு நீண்டு உள்ளது.
- இது இந்த அண்டத்திற்கும் அதன் அண்டையில் உள்ள ஓர் அண்டத்திற்கும் இடையில் உள்ள ஈர்ப்பு விசை சார்ந்த தொடர்புகளின் விளைவினால் உருவானதாகும்.




# மாநிலச் செய்திகள்

## இந்தியாவில் பெண்களுக்கான சிறந்த நகரங்கள் 2024

- 'இந்தியாவில் பெண்களுக்கான சிறந்த நகரங்கள் 2024' (TCWI) என்பதின் மூன்றாவது பதிப்பு அறிக்கையில் பெங்களூரு நகரானது சென்னையை விஞ்சியுள்ளது.
- பெங்களூருவைத் தொடர்ந்து சென்னை, மும்பை, ஐதராபாத் மற்றும் புனே ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, வேலூர், மதுரை, சேலம் ஈரோடு மற்றும் திருப்பூர் ஆகிய 8 நகரங்கள் இந்தக் குறியீட்டில் இடம் பெற்றுள்ளதுடன், தமிழ்நாட்டின் நகரங்கள் ஆனது இந்தக் குறியீட்டில் முதல் 25 இடங்களில் முன்னணி வகிக்கின்றன.
- தெற்கு மாநிலங்கள் ஆனது அதிக உள்ளடக்க வாய்ப்புகள் கொண்ட பிராந்தியமாக உருவெடுத்து, சமூகம் மற்றும் தொழில்துறைகளில் பெண்களின் உள்ளடக்கத்தில்


ஒப்பீட்டளவில் அதிக மதிப்பெண்களைப் பெற்றுள்ளன.

- தெற்கு மாநிலங்களின் சராசரி நகர உள்ளடக்க மதிப்பெண் 18.56 ஆகும்.
- இதில் தெற்கு மாநிலங்களுக்கு அடுத்தபடியாக மேற்கு மாநிலங்கள் இடம் பெற்று உள்ளன (16.92).
- மத்திய மற்றும் கிழக்கு மாநிலங்கள் சராசரியாக முறையே 11.79 மற்றும் 10.55 என்ற மதிப்பெண்களுடன் இந்தக் குறியீட்டில் பின்தங்கியுள்ளன.
- வடக்கு மாநிலங்களுக்கான சராசரி நகர உள்ளடக்க மதிப்பெண் 14 ஆகும்.




# முக்கிய தினங்கள்

## புவி சுழற்சி தினம் - ஜனவரி 08




- இத்தினமானது, பிரான்சு நாட்டினைச் சேர்ந்த இயற்பியலாளர் லியோன் ஃபூக்கோ 1851 ஆம் ஆண்டில், புவியானது அதன் அச்சில் சுழல்கிறது என்பதனைக் கண்டறிந்ததன் ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது.
- இந்த நாள் என்பது பாரீஸ் நகரில் ஃபூக்கோவின் முதல் செயல் விளக்கத்தினை நன்கு கௌரவிக்கிறது.
- கி.மு. 470 ஆம் ஆண்டில், கிரேக்கர்கள் பூமி தன்னைத் தானே சுற்றிக் கொள்வதாகக் கூறினர்.

- ஆனால் ஃபூக்கோ ஒரு ஊசலின் பெரும் உதவியுடன் புவியின் சுழற்சியை விளக்கிக் காட்டினார்.

### பிரவாசி பாரதிய திவாஸ் - ஜனவரி 09

- 18வது பிரவாசி பாரதிய திவாஸ் மாநாடு ஆனது ஒடிசாவின் புவனேஸ்வர் நகரில் ஏற்பாடு செய்யப்பட்டது.
- இந்த மாநாட்டின் கருத்துரு, "The Diaspora's Contribution to a Viksit Bharat" என்பதாகும்.
- இந்தியாவின் மேம்பாட்டில் வெளிநாடு வாழ் இந்தியர்களின் பங்களிப்பினை இந்த நாள் கொண்டாடுகிறது.
- 2015 ஆம் ஆண்டு முதல், இந்தத் தினத்திற்கான கொண்டாட்ட வடிவமானது, இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை கொண்டாடும் வகையில் திருத்தப்பட்டுள்ளது.
- 1915 ஆம் ஆண்டில் இதே நாளில் தான் காந்தி தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பினார்.




## இதரச் செய்திகள்

### BIS நிறுவனத்தின் 78வது ஸ்தாபன தினம்

- இது 1947 ஆம் ஆண்டு ஜனவரி 06 ஆம் தேதியன்று இந்தியத் தரநிலை நிறுவனமாக (ISI) அமைக்கப்பட்டது.
- பின்னர் இது 1986 ஆம் ஆண்டு இந்தியத் தரநிலைகள் வாரியச் சட்டத்தின் கீழ் மறு சீரமைக்கப் பட்டது.
- BIS ஆனது தர நிலைகளை வலுப்படுத்தவும் ஒரு போட்டித் தன்மையை அதிகரிக்கவும் பணியாற்றுகிறது.
- இது நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.

- 1955 ஆம் ஆண்டு முதல் பல்வேறு உற்பத்திப் பொருட்களின் உற்பத்தியாளர்களுக்கு BIS நிறுவனத்தினால் ISI முத்திரை வழங்கப்படுகிறது.




## DSIR துறையின் 40வது ஸ்தாபன தினம்




- அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சித் துறையானது (DSIR) 1985 ஆம் ஆண்டு ஜனவரி 04 ஆம் தேதியன்று நிறுவப்பட்டது.
- தொழில்நுட்ப மேம்பாடு, பரிமாற்றம் மற்றும் பயன்பாட்டில் கவனம் செலுத்துவதன் மூலம் உள்நாட்டுத் தொழில்துறை ஆராய்ச்சியை ஊக்குவிப்பதே DSIR துறையின் முதன்மையான பணியாகும்.
- வணிக ரீதியாக சாத்தியமான மற்றும் உலகளவில் போட்டித்தன்மை வாய்ந்த தொழில் நுட்பங்களை உருவாக்க ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் (R&D) நன்கு ஈடுபடுவதற்கு தொழில்துறைகளை ஊக்குவிப்பதை இந்தத் துறை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## மோசமான போக்குவரத்து நெரிசல் கொண்ட ஆசிய நகரங்கள்

- ஓட்டுநர்கள் ஆண்டுதோறும் சராசரியாக 132 மணிநேரம் போக்குவரத்தில் சிக்கிக் கொள்வதால், ஆசியாவிலேயே மிகவும் மோசமான போக்குவரத்து நெரிசல் கொண்ட நகரங்களில் பெங்களூரு முதலிடத்தில் உள்ளது.
- 2023 ஆம் ஆண்டு டாம்டாம் போக்குவரத்துக் குறியீட்டின் படி, நகரத்தில் ஓட்டுநர்கள் 10 கிலோமீட்டர் பயணம் செய்வதற்கு சராசரியாக சுமார் 28 நிமிடங்கள் 10 வினாடிகளை

செலவிடுகிறார்கள்.

- மேற்கு இந்தியாவின் புனே நகரம் 10 கிலோ மீட்டருக்கு 27 நிமிடங்கள் 50 வினாடிகள் என்ற நீண்ட பயண நேரத்துடன் இரண்டாவது இடத்தில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து பிலிப்பைன்ஸில் உள்ள மணிலா (27 நிமிடங்கள் 20 வினாடிகள்) மற்றும் தைவானில் உள்ள தைச்சுங் (26 நிமிடங்கள் 50 வினாடிகள்) இடம் பெற்றுள்ளன.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★